பக்கங்கள்: 11

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 15 சனிக்கிழமை 31.08.2024 கதிர் 297

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரைநிறுத்தியிருக்கும் பொதுக்கட்டமைப்பில் உள்ள பொதுச் சபையைச் சேர்ந்த தனிநபர்களான 7பேரில்பெரும்பானவர்களான ☞2

# காணாமலாக்கப்படல் குறித்த உண்மையும் நீதியும் அவசியம்

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி அறிக்கை




இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக் கப்படல்கள் தொடர்பில் உண்மையை வெளிப்படுத்துவதும், அவற்றால் பாதிக்கப்பட்டோருக்கான நீதியை உறுதிசெய்வதும் மிக அவசியம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் -அன்ட்ரூ பிரெஞ் தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான ஓகஸ்ட் 30 சர்வதேச தினத்தையொட்டி ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் -அன்ட்ரூ பிரெஞ் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ☞2

### காணாமலாக்கப்பட்டோரின்

# உறவுகள் மீது தொடரும் அடக்குமுறை பாதுக்கப்பட்டோருக்கு ஆதரவு தேவை

## ஐ.நாவிடம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

உண்மை மற்றும் நீதிக்கான தமது உரிமையைக்கோரும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் மீது இலங்கை ஆட்சியாளர்கள் தொடர்ந்து ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்துவருகின்றனர். ஆட்சியாளர்கள் இத்தகைய மீறல்களில் ஈடுபடும்போது மனித உரிமைகள் பேரவையும், ஏனைய நாடுகளின் ஆட்சியாளர்களும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் பக்கம் நிற்கவேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

ஓகஸ்ட் 30, வலிந்து காணாமலாக்கப்படல்களால்பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தையொட்டி மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது. அது மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமக்கான உரிமையைக்கோரும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் மீது இலங்கை ஆட்சிகள் தொடர்ந்து ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்துவருகின்றது. கண்காணிப்பு, ஒடுக்குமுறைகள், பொய்யான குற்றச்சாட்டுக்கள், வன்முறைகள் மற்றும் தன்னிச்சை யான கைதுகள் என்பவற்றின் ஊடாக பாதுகாப்புத்தரப்பினர் அக்குடும்பங்களைத் தொடர்ச்சியாகத் துன்புறுத்திவருகின்றனர்.

வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேசதினத்தை முன்னிட்டு ஓகஸ்ட் 30 ஆம் திகதி (நேற்று) வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் ☞8



# சிலிண்டருக்கு வாக்கு மறுத்தால் தண்ணீரும்கூடக் கிடைக்காது

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின்வரிக்கொள் கையைநடைமுறைப்படுத்த சஜித்தும் அனுரவும் ஏன் அவரை பதவியிலிருந்து விரட்டியடித்தார்கள்? ☞8

# வரிக் குறைப்பு சாத்தியமற்றது

## கொழும்பு பல்கலை விரிவுரையாளர் கருத்து

சர்வதேச நாணய நிதியத்துடன் பேசி வரிக்குறைப்பை மேற்கோள்ளப் போவதாக அரசியல் அரங்கில் கூறப்பட்டு வருகின்றது. ஆனால் அதற்கான சாத்திங்கள் இல்லை. ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவது புதிய ஆட்சியாளர்களுக்கு கட்டாயம். இல்லையேல் அவர்களால் 2025 வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்க முடியாமல் போகும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பிரியங்கா துனுசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து ஆறு காலாண்டுகளாக எதிர்மறையான பொருளாதார வளர்ச்சியைப் பதிவுசெய்த இலங்கையின் பொருளாதாரம் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் 2023ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் இருந்து மீண்டு வருகின்றது.

அதுநேரம், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் குறித்து மீளப் பேச்சு நடத்தப் போவதாக சில அரசியல் கட்சிகள் வெளியிட்டு வரும் அறிக்கைகளால் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படப்போகும் ☞2

# ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பில் விருப்பத் தெரிவு கட்டாயமில்லை

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கும்போது இரண்டாவது மூன்றாவது விருப்பத் தெரிவை இடுவது கட்டாயமில்லை என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தங்கள் வாக்குகளை குறிக்க விரும்பும் வாக்காளர்கள், வேட்பாளரின் பெயருக்கு முன்னால் உள்ள இடத்தை குறியிட்டு மட்டும் ☞8

# நாமலையும் சந்தித்த தோவல்

கொழும்புக்கு இரண்டு நாள் பயணமாக வந்திருந்த இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவையும் நேற்றுச் சந்தித்துப் பேசினார், அங்கு இருவரும் பரஸ்பர அக்கறைகொண்ட பலபகுதிகள் குறித்து விவாதித்தனர்.

ஜனாதிபதி வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச மற்றும் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோரையும் சந்தித்து அஜித் தோவல் பேசியிருந்தார்.

தற்போது நடைபெற்று வரும் கொழும்பு செக்யூரிட்டி ஆன்கிளேவ் (CSC) முயற்சியை பின்தொடர் ☞2

# தேர்தல் காலங்களில் இனவாதத்தை கையிலெடுக்கும் கூட்டமைப்பு, மு.கா.

## அப்துல் மஜீத் மௌலவி குற்றச்சாட்டு

தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸும் எப்போதும் கணவனும் மனைவியும் போன்று தான் இருப்பார்கள். தேர்தல் வந்ததும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் முஸ்லீம்களுக்கு எதிராக பேசுவார்கள். முஸ்லீம் காங்கிரஸ் தமிழருக்கு எதிராக பேசுவார்கள். இவ்வாறாக பேசி தத்தமது பக்கம் உள்ள இனரீதியாக சிந்திக்கின்ற மக்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதை நாம் காண்கின்றோம் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி தவிசாளரும் உலமா கட்சி தலைவருமான முபாறக் அப்துல் மஜீத் மௌலவி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அண்மையில் அம்பாறை மாவட்டம், கல்முனை பகுதியில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: முஸ்லீம் சமூகம் ☞8

# திருகோணமலை குதங்கள் மூலம் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம்

## அனுரகுமார திஸநாயக்க அறிவிப்பு

திருகோணமலையில் பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட 99 எண்ணெய் குதங்களையும் பயன்படுத்தி தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்படும் என்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் சர்வதேச சந்தையில் விற்பனை செய்யப்படும் என்றும் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ☞8

# ஒற்றையாட்சிக்கு எதிரான கொள்கையை வகுக்கோம்

## நாமல் மீண்டும் அறிவிப்பு

நாட்டின் ஒற்றையாட்சிக்கு எதிரான கொள்கையை வகுக்கமாட்டோம் என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச மீண்டும் தெரிவித்துள்ளார். வடக்கு மக்களின் பிரச்சினை ☞2

## இனி இது .....

பத்தி எழுத்தாளர்கள் பெரும்பாலும் தங்கள் கட்டுரைகளில் புவிசார் அரசியல், பிராந்திய அரசியல் என்பன பற்றி பிய்த்து உதறுவார்கள். பிராந்திய மற்றும் புவிசார் அரசியலைக் கையாளாமல் ஈழத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு ஒன்றைப் பெறமுடியாது, குறிப்பாக இந்தியாவைக் கையாள்வதன் மூலமே ஒரு தீர்வைப் பெறமுடியும் என்றும் எழுதிக் கிழித்திருக்கிறார்கள். அண்மையில் பொது வேட்பாளருக்கு ஆதரவான அவர்களது காணொலிப் பதிவுகளில்கூட இந்தியாவைக் கையாள்வதுதான் முக்கியம் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் பொது வேட்பாளரை நிறுதும் தமது முடிவு சர்வதேச நாடுகளுக்கு அழுத்தங்களைக் கொடுத்துள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றார்கள்.

அதாவது, தமது தமிழ் பொது வேட்பாளர் முடிவால் அழுத்தங்களுக்கு உள்ளாகக்கூடிய சர்வதேச நாடுகள், இந்தியாவும் அதில் உள்ளடக்கம், தம்முடன் பேரம் பேச வரும் என்றும் அப்போது தமது கோரிக்கைகளை முன்வைத்து அவற்றை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்றும் அவர்கள் கருதுகின்றார்கள். ஆனால், அவர்கள் நினைத்தபடிதான் கள யதார்த்தம் நகர்கின்றது என்று சொல்வதற்கில்லை என்பதை இருநாள் பயணமாகக் கொழும்பு வந்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகருக்கும் தமிழ்க் கட்சிகள் சிலவற்றுக்குமான சந்திப்பிலி-ருந்து புரிந்துகொள்ள முடிகின்றது.

தேர்தல் களத்தில் உள்ள வேட்பாளர்களில் யாரை ஆதரிக்கவேண்டும் என்கிற எந்த அறிவுரையையோ அதற்கான சுமிக்ஞைகளையோ இந்தியா வழங்கவில்லை. ஆனால், தமிழ் மக்கள் தமது வாக்குகளை காத்திரமான வழியில் பயன்படுத்த வேண்டும் என்பதை இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆணித்தரமாகத் தெரிவித்திருக்கிறார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் புறக்கணிப்பு மற்றும் தமிழ் பொது வேட்பாளர் மூலமான தேர்தல் புறக்கணிப்பு இரண்டையும் அவர் ஆதரிக்கவில்லை என்பது அவரது கருத்துக்களில் இருந்து தெரிவந்திருக்கிறது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளாத கட்சித் தலைவர் ஒருவருக்கு, இந்தியாவின் நிலைப்பாடு யாரை நோக்கியதாக இருக்கும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது அல்லது அவர் புரிந்துகொள்ளும் விதத்தில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது என்று தெரியவந்தது. "அவர்கள் இவரை ஆதரிப்பது போலத்தான்படுகிறது" என்று அந்தத் தலைவர் தன்னைச் சந்தித்த கட்சியின் மற்றைய தலைவர்களிடம் கூறியிருக்கிறார்.

உலக நாடுகள் முழுவதிலும் உள்ள சிறுபான்மை மக்கள், இப்படிப்பட்ட தேர்தல்களில் தமது வாக்குகளை ஒன்று திரட்டி வேட்பாளர்களுடன் பேரம் பேசும் சக்தியாக அதனைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அஜித் தோவல் தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பில் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாக்குகள் ஒட்டுமொத்த வாக்குகளில் 11 வீதமாகவோ 8 வீதமாகவோ இருந்தாலும்கூட அதனை ஒன்றுதிரட்டி ஒற்றுமையாக வெற்றியாளரைத் தீர்மானிக்கும் வாக்குகளாகப் பயன்படுத்தவேண்டும், அதற்குப் பதிலாக உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான உறுதிமொழிகளை வாக்குறுதிகளை அவரிடமிருந்து பெறவேண்டும் என்று அஜித் தோவல் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

சிங்களத் தலைவர்கள் இதுவரையில் தமிழர்களுக்கு தீர்வு ஒன்றைத் தரவில்லை. அதனால் அவர்களில் யாரையும் ஆதரிப்பதில் அர்த்தமில்லை. அவர்களில் யாராவது சமஷ்டியைத் தருவார்களாயின் அதனைப் பரிசீலிக்கலாம். இல்லையென்றால் எங்கள் மக்களின் உணர்வுகளுக்கு மாறாக எங்களால் செயற்படமுடியாது என்கிற ரீதியில் சந்திப்பில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சொன்னபோது, ஜனநாயகம் என்பது தலைகளின் எண்ணிக்கையே தவிர தலைகளுக்குள் என்ன இருக்கிறது (உணர்வு) என்பது பற்றியதல்ல என்று அவருக்கு பதிலடி கிடைத்திருக்கிறது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியா தலையிட்டு தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுத்தரவேண்டும். ஆனால் இந்தியா ஒன்றும் செய்வதில்லை என்று தமிழ் கட்சியினர் தரப்பில் சொல்லப்பட்டதற்கு, உங்களால் செய்யக்கூடியவற்றையே செய்யாமல் இருந்துகொண்டு இந்தியா எதுவும் செய்யவில்லை என்று எதற்குச் சொல்கிறீர்கள் என்று சாரப்பட சிரித்துக்கொண்டே வாழைப்பழத்தில் ஊசி ஏற்றியிருக்கிறார் அஜித் தோவல்.

தமிழர்கள் ஒன்றில் வெல்பவரோடு நிற்கலாம் அல்லது இந்தப் போட்டியில் இரண்டாவது இடத்திற்கு வருபவரோடு அதாவது வெல்பவருக்கு எதிர்காலத்தில் அழுத்தம் கொடுக்கவல்லவரோடு நிற்கலாம் அதனை விடுத்து வாக்குகளை வீணடிப்பது பயனற்றது என்பதுதான் இந்தி தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் தமிழ்க் கட்சிகளின் சந்திப்பினது சாராம்சமாகக் காணப்பட்டிருக்கின்றது. இதனையும் அவர் இராஜதந்திர வழிமுறைகளுக்கு அப்பாற்பட்ட மொழியில்தான் கூறியிருக்கிறார். எல்லாவற்றையும் கேட்டுவிட்டு வந்து, "அண்ணைக்கு ஒரு ஊத்தப்பம்" என்கிற வடிவேல் நகைச்சுவை போன்று, இந்தியாவிடம் நாங்கள் இதையெல்லாம் வலியுறுத்தினோம் என்று மட்டும் அறிக்கைவிட்டுக்கொண்டிருக்கின்றன எமது அரசில் கட்சிகள். ஏதோ இவர்கள் சொன்னதும் இந்தியா கேட்டுவிடும் என்பதைப் போலவும், இவர்களால் இந்தியாவை வெற்றிகரமாகக் கையாள முடிவதைப் போலவும் ஒரு நினைப்பு அவர்களுக்கு! வாழ்க எமது அரசியல்வாதிகள்! வளர்க இவர்களின் ......

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## காணாமலாக்கப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை நினைவுகூரும் இவ்வேளையில், இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் உண்மையை வெளிப்படுத்துவதும், அவற்றால் பாதிக்கப்பட்டோருக்கான நீதியை உறுதிசெய்வதும் மிக அவசியம் என்பதை நினைவுறுத்துகின்றோம். அதேபோன்று சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழான குற்றமான வலிந்து காணாமலாக்கப்படல்கள் இடம்பெறுவதற்கோ அல்லது அதனை சகித்துக்கொள்வதற்கோ இனி இடமில்லை என்ற உறுதியை இந்நாளில் மீளப்புதுப்பித்துக்கொள்வோம்.

இலங்கையில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள் வதற்காகப் பல தசாப்தகாலமாகக் காத்திருக்கி றார்கள். வலிந்து காணாமலாக்குதல் என்பது பல்வேறு மனித உரிமைகளை மீறத்தக்க மிகமோசமான குற்றச்செயலாகும். அதன்மூலம் ஏற்படக்கூடிய துன்பம் மற்றும் பாதிப்பு என்பன பல அடுக்குகளைக் கொண்டதாக இருக்கிறது.

வலிந்து காணாமலாக்கப்படல்களால் தோற்றுவிக்கப்படும் பாதுகாப்பற்ற உணர்வு காணாமலாக்கப்பட்டவரின் நெருங்கிய உறவினர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. மாறாக அது அவர்களது ஒட்டுமொத்த சமூகத்தையும் கூட்டாகப் பாதிக்கும். தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு பாதிக்கப்பட்ட தரப்பினரின் துன்பத்தையும், ஆற்றாமையையும் மேலும் அதிகப்படுத்துகின்றது.

வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் சார்ந்த விடயத்தில் கடந்த சில தசாப்தங்களாக இலங்கை முன்னேற்றகரமான நகர்வுகளை மேற்கொண்டிருக்கின்றது. வலிந்து காணாமலாக்கப்படல்களிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயத்தில் கையெழுத்திடல், காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகத்தை ஸ்தாபித்தல் என்பன அதில் உள்ளடங்குகின்றன.

எது எவ்வாறிருப்பினும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான உண்மை, நீதி மற்றும் இழப்பீடு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு மேலும் பல நகர்வுகளை மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. காணாமல்போனோர் பற்றிய விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், உண்மையைக் கண்டறிவதற்கும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் அதற்கு வழங்கப்பட்டுள்ள பரந்துபட்ட அதிகாரங்களை செயற்திறன்மிக்கவகையில் பயன்படுத்தவேண்டும்.

முல்லைத்தீவில் கண்டறியப்பட்ட மனிதப்புதைகுழியின் அகழ்வுப்பணிகள் கடந்த ஜூலை மாதம் முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டன. இலங்கையில் போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னர் முழுமையாக அகழ்வுப்பணிகள் பூர்த்திசெய்யப்பட்ட முதலாவது மனிதப்புதைகுழி இதுவாகும். அதனையடுத்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான பதில்களை வழங்கக்கூடியவகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என நாம் நம்புகின்றோம்.

முல்லைத்தீவு மனிதப்புதைகுழி விவகாரத்தில் அடையப்படக்கூடிய குறிப்பிடத் தக்களவிலான முன்னேற்றம், பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு உதவும் - என்றுள்ளது.

## நாமலையும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்காக தோவல் வியாழக்கிழமை கொழும்பை வந்தடைந்திருந்தார்.

## ஒற்றையாட்சிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேறு தெற்கு மக்களின் பிரச்சினைகள் வேறு அல்ல. ஒரே பிரச்சினைகளைத்தான் எல்லோரும் எதிர்கொள்கிறார்கள்.

பியகமபகுதியில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தேசிய தொழிற்றுறையை மேம்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்துவோம். தேசிய உற்பத்தியாளர்கள், முயற்சியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கி தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவோம். விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவோம்.

தொழிலின்மை பிரச்சினை தற்போது தீவிரமடைந்துள்ளது. எதிர்வரும் ஐந்து ஆண்டுகளின் 10 இலட்சம் தொழில் வாய்ப்புக்களை அறிமுகப்படுத்துவோம். அதற்கான திட்டங்களை செப்டெம்பர் 22 முதல் ஆரம்பிப்போம். தேசிய மட்டத்தில் கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவோம்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் பற்றி பொய்யுரைக்க வேண்டிய தேவை கிடையாது. முடிந்ததை முடியும் என்போம், முடியாததை முடியாது என்போம். வடக்கில் உள்ள பிரச்சினைகள் தான் தெற்கிலும் உள்ளன. நாடு என்ற ரீதியில் சிந்தித்து சிறந்த தீர்மானத்தை எடுத்தால் வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணலாம். அப்போது அரசியல்வாதிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காமல் போகும்.

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகள் ஒருமித்த தன்மையில் உள்ளன. அதிகார பகிர்வு, தேசிய வளங்களை தனியார் மயப்படுத்தல், இறக்குமதி பொருளாதாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆனால் நாட்டின் ஒற்றையாட்சிக்கு எதிரான கொள்கையை நாங்கள் வகுக்க போவதில்லை - என்றார்.

## வரிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிப்புகள் குறித்து மக்கள் சிந்திக்க வேண்டுமென கலாநிதி துனுசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தால் பணவீக்கம் மற்றும் வட்டி விகிதங்கள் குறைந்தன, அமெரிக்க டொலருக்கு எதிரான மாற்று விகிதம் ரூ. 300இல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 2027 ஆம் ஆண்டளவில் மொத்த தேசிய உற்பத்தியில் 15.3 சதவீதமாக வரி வருவாயை அதிகரிப்பது, 2032இல் கடன் விகிதத்தை 95% ஆகக் குறைப்பது மற்றும் வெளிநாட்டுக் கடனை 4.5% ஆகக் குறைப்பது ஆகியன தற்போதைய முன்மொழியப்பட்ட இலக்குகளாகும். புதிய ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் இவற்றை நிறைவேற்றித்தான் ஆகவேண்டும். ஜி.டி.பி. பற்றி மீண்டும் விவாதிக்க முடியாது.

அந்த இலக்குகளை அடைவதற்கான வழிமுறையை மாற்ற முடியுமா என்று விவாதிக்க முடியும் என்றாலும், இந்த ஒப்பந்தத்தில் நுழைவதற்கு முன்பு, நிதி அமைச்சகம், மத்திய வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் அந்த விருப்பங்கள் குறித்து ஆழமாக ஆய்வு செய்துள்ளனர், எனவே அத்தகைய தெரிவுகள் உள்ளதாகக் கூறமுடியாது.

வரிக் குறைப்பு, வரி வசூல் போன்ற பேச்சுக்கள் அரசியல் அரங்கில் விவாதிக்கப் பட்டாலும், குறுகிய காலத்தில் அத்தகைய தீர்வுகள் சாத்தியமாகாது என்பது சர்வதேச நாணய நிதியத்திற்குத் தெரியும் என்றும், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு தாமதமானால் புதிய ஆட்சியாளர்களால் 2025ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டை முன்வைக்க முடியாதுபோகும் - என்றார்.

## தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உசுப்பேத்தும் அரசியலுக்கு அடிமையாக இருப்பதை காண்கின்றோம். தேர்தல் அல்லாத காலங்களில் இனவாத அரசியலை விரும்ப மாட்டார்கள். இன ஐக்கியம் என்பார்கள். ஆனால் தேர்தல் காலங்களில் வேண்டுமென்றே மக்களை உசுப்பேற்றி தங்களுக்கு வாக்குகளை பெறுவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் இனவாதத்தை முஸ்லீம்கள் மத்தியில் இணைத்து பிற இனவாதிகளை கொண்டுவந்து அவர்களை பேச வைத்தாவது இனவாதத்தை உருவாக்குவதை காண்கின்றோம்.

எனவே தான் இவ்வாறான அரசியலை செய்ய வேண்டாம் என ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பினை கேட்கின்றோம். தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸும் எப்போதும் கணவனும் மனைவியும் போன்று தான் இருப்பார்கள்.

தேர்தல் வந்ததும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் முஸ்லீம்களுக்கு எதிராக பேசுவார்கள். முஸ்லீம் காங்கிரஸ் தமிழருக்கு எதிராக பேசுவார்கள். இவ்வாறாக பேசி தத்தமது பக்கம் உள்ள இனரீதியாக சிந்திக்கின்ற மக்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதை நாம் காண்கின்றோம். இவ்வாறான அரசியலை உலமா கட்சியாகிய நாம் மறுத்து வருகின்றோம் - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir




# ரணில் தமிழ் மக்களை ஏமாற்றுவார்; பொதுவேட்பாளருக்கே எனது ஆதரவு

## நான் ரணிலின் ஆள் அல்லன் என விக்கினேஸ்வரன் தெரிவிப்பு

ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க பேச்சில்மட்டும்வாக்குறுதியைவழங்குவார்;. ஆனால் தமிழ் மக்களுக்கு எதனையும் செய்ய மாட்டார் என தமிழ்மக்கள்கூட்டணியின்தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நான் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஆதரவு வழங்குவதாகவும் பொது வேட்பாளரின் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக பேசப்பட்டது.

நான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னர் ஆதரவு வழங்கி பேசியமை உண்மை. அவர் எனது பாடசாலை நண்பரும் கூட.

13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தற்போதைய ஜனாதிபதி வேட்பாளரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவுடன் பல பேச்சுக்களை நடத்தினோம்.

13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் நிரந்தர தீர்வாக நாம் ஏற்றுக் கொள்ளாத நிலையில் குறைந்தபட்சம் அதிலுள்ள அதிகாரங்களையாவது நடைமுறைப்படுத்த ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சில் ஈடுபட்டோம்.

பேச்சில் 13 ஐ நடைமுறைப்படுத்துவதற்கான நிபுணர் குழு பரிந்துரைகளை வழங்குவதற்காக நிர்மலா சந்திரகாசன் தலைமையில் நிபுணர் குழுவுக்கான பெயர்களை வழங்கினோம். ஆனால் ரணில் விக்ரமசிங்க குறித்த குழுவை அங்கீகரிக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களில் சாதகமான நிலைப்பாட்டை மேற்கொள்வார் என்ற நம்பிக்கையில் அவர் மீது நம்பிக்கை வைத்தோம்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க பேச்சில் மட்டும் செயல்படுத்தும் நபராக காணப்பட்டாரே தவிர, நடைமுறையில் தமிழ் மக்களுக்கு எதனையும் செய்யவில்லை.

அதன் காரணமாக தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற அவசியத்தை முதலில் முன்வைத்து முன்மொழிந்தவர்களில் நானும் ஒருவன்.

நான் கொழும்பில் இரண்டு தடவைகள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் பொது வேட்பாளரின் பிரசாரக் கூட்டங்களுக்கு செல்ல முடியவில்லை இருந்தாலும் எனது கட்சி சார்பில் அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

நான்கலந்துகொள்ளாததை அறிந்தவர்கள் நான் ரணில் விக்கிரமசிங்கவுக்குஆதரவுவழங்கப்போவதாகபுரளிகளை கிளப்பி விட்டார்கள்.

ஆகவே தமிழ் பொது வேட்பாளர் தமிழ் மக்களின் உரிமை சார்ந்த கோரிக்கைகளை முன்வைத்து தேர்தலில் போட்டியிடும் நிலையில் தமிழ் மக்கள் அவருக்கான அமோக ஆதரவை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் முன்னாள் மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன்மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின்மத்தியகுழுஉறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(05)

# மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த ஊடகர்கள் நாடாளுமன்றுக்கு வருகை

நாடாளுமன்றத்தில் ஆய்வுப் பயண மொன்றை மேற்கொண்டு மத்தியகிழக்கு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகவியலாளர்கள்சிலர்கடந்தசெவ்வாய்க்கிழமைநாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்திருந்தனர்.

இதன்போது இலங்கை நாடாளுமன்றம்தொடர்பானவிழிப்புணர்வு நிகழ்ச்சியும் அவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாடாளுமன்றக் கட்டமைப்பும் வகிபாகமும், சட்டவாக்க நடைமுறை, நாடாளுமன்ற விவாதங்களின் முறைமை, நாடாளுமன்றக் குழுக்களின் பணிகள் மற்றும் நாடாளுமன்ற செயற்பாடுகளை பொதுமக்களுக்குக்கொண்டுசேர்த்தல் என்பன தொடர்பில் இதன்போது விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

விசேடமாக, தெற்காசியாவின் சூழலில் இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகள்எவ்வாறுசெயல்படுகின்றன என்பது குறித்தும், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் ஏனையசர்வதேசஉடன்படிக்கைகளை அடைவதில்இலங்கைநாடாளுமன்றம் கவனம் செலுத்தும் விதம் குறித்தும் வெளிநாட்டுஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை நாடாளு மன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, உதவிச்செயலாளர்நாயகம்ஹன்ஸ அபேரத்ன, சட்டவாக்க சேவைகள் திணைக்கள பணிப்பாளரும் தொடர்பாடல்திணைக்களபதில்பணிப்பாளருமான எம். ஜயலத் பெரேரா மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின்பிரதமநிறைவேற்றுஅதிகாரி குமார் லோபஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுப் பயணத்தில் குவைட் இராஜ்ஜியம், எகிப்து, அல்ஜீரியா, மொரோக்கோ உள்ளிட்ட நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஊடகவியலாளர்கள் கலந்து கொண் டனர். சர்வதேச ஊடகவியலாளர்களுக்கான நிலையத்தினால் இந்த ஆய்வுப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஒத்துழைப்பு வழங்கியிருந்தது.(05)

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்துக்கு தடைகோரி நீதிமன்றை நாடிய பொலிஸார்

## கோரிக்கையை நிராகரித்த நீதிமன்றம்

நேற்று (வெள்ளிக்கிழமை) யாழ்ப்பாணத்தில் சர்வதேசவலிந்துகாணாமல்ஆக்கப்பட்டதினத்தை அடையாளப்படுத்தி வடக்கு கிழக்கு வலிந்து காணாமல்ஆக்கப்பட்டவர்களின்உறவினர்களால் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்குத் தடை விதிக்க கோரி யாழ்ப்பாண தலைமையக பொலிஸார் யாழ். நீதிவான் நீதிமன்றில் விடுத்த வேண்டுகோளை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நிராகரித்துள்ளது.

இந்த தடையுத்தரவு விண்ணப்பத்திற்கான வழக்கு விசாரணை வியாழக்கிழமை யாழ். நீதவான்நீதிமன்றில்இடம்பெற்றவேளையிலேயே நீதிமன்றம் பொலிஸார் செய்த விண்ணப்பத்தை நிராகரித்துள்ளது.

யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி இளங்கோதைக்கும் அவரோடு இணைந்தவர்களுக்கு எதிராகவும் இந்தத் தடையுத்தரவு வழங்குமாறு பொலிஸார்நீதிமன்றைநாடியநிலையில்வியாழக்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகி தமது தரப்பு நியாயங்களை முன்வைக்குமாறு யாழ். மாவட்டவலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி இளங்கோதைக்கு யாழ் நீதிவான் நீதிமன்று அழைப்பாணை அனுப்பியிருந்தது.

இதற்கு அமைவாக இடம்பெற்ற வழக்கு விசாரணையில் யாழ். மாவட்டவலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின்உறவுகளின் சங்க தலைவி உள்ளிட்டவர்கள் ஆஜராகி தமது போராட்டத்தின் நியாயப்பாட்டையும் தமக்குள்ள உரிமையையும் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இந்த வழக்கில் தடைகோரி விண்ணப்பம் செய்த பொலிஸார் 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் சட்டம் பிரிவு 69 கீழாக தற்போது தேர்தல் காலமாக இருப்பதால் வேட்பு மனு தாக்கல் செய்த காலத்திலிருந்து தேர்தல் முடியும் வரையிலான காலம் வரையில் பேரணிகள் ஊர்வலங்களை செய்யமுடியாது என்றும் மற்றும் தேர்தல் காலமாக இருப்பதால் இந்தப் பேரணிக்கு பாதுகாப்பு வழங்க உரிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் இல்லாமல் இருப்பதாலும் தற்போது நல்லூர் உற்சவ காலம் என்றபடியாலும் நேற்று (வெள்ளிக்கிழமை) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பங்குபற்றும் கூட்டம் யாழில்இடம்பெறவுள்ளதாலும்மேலும்நடக்கவுள்ள இந்தகாணாமல்ஆக்கப்பட்டவர்களின்உறவுகளின் பேரணியால்அரசியல்தலையீடுகள்நடைபெறலாம் எனவும் கலகங்கள் ஏற்படலாம் எனவும் குற்றம் ஒன்று நிகழலாம் என்றும் சமாதான குலைவான நிலைமை ஒன்று தோன்றலாம் எனக் கோரி இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் பேரணிக்குத் தடைவிதிக்குமாறு மன்றில் தமது சமர்பணத்தை செய்தனர்.

பொலிஸாரின் இந்த விண்ணப்பத்துக்கு எதிராக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்ப்பில் மன்றில் முன்னிலையாகி தமது வாதங்களை முன்வைத்த சிரேஸ்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன் மற்றும் அம்பிகா சிறீதரன் சட்டத்தரணி சங்கர் ஆகியோர் 1981 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் சட்டம் பிரிவு 69 கீழாக மூன்று விதமான ஊர்வலங்களை நடத்துவதற்கு விதிவிலக்கு வழங்கப்டுள்ளதை சுட்டிக்காட்டி தமது சமர்பணங்களை செய்திருந்தனர்.

அதாவது , தேர்தல் அறிவிக்கப்படுள்ள காலங்களில் வருகின்ற மே முதலாம் திகதி வருகின்ற தொழிலாளர் பேரணி மற்றும் சமய சம்பந்தமான ஊர்வலங்கள் பொது நோக்குடன் சமூக நோக்கத்திலான ஊர்வலங்கள் செய்ய முடியும்என்றும்நேற்று ஓகஸ்ட் 30 நடைபெறவுள்ள பேரணி சமூக நோக்கத்திலான பொது விடயம் என்றும் இதற்கு எதிராக பொலிஸார் தடையுத்தரவு கோரமுடியாது என்றும் ஒன்றுகூடுவதற்கான உரிமை, அடிப்படை அரசியல் உரிமை என்றும் இதனை அனுபவிப்பதை பொலிஸார் தடை செய்ய முடியாது என்றும் அத்தோடு உற்சவம் நடைபெறுகிறது என்பதை காரணம் காட்டியோ அரசியல் கட்சி ஒன்றின் கூட்டம் ஒன்று இடம்பெறுகின்றது என்பதை காரணம் காட்டியோ அல்லது எதிர்காலத்தில் குற்றம் ஒன்று நிகழலாம் என்பதை காரணம் காட்டியோ பொலிஸார் இந்த தடையுத்தரவு கோர முடியாது என வாதங்களை முன்வைத்தனர்.

இதனடிப்படையில் நீதிவான் நீதிமன்று தனது கட்டளையில் பொலிஸாரால் செய்யப்பட்ட தடையுத்தரவுகோரிய விண்ணப்பத்தை சாதகமாக பரிசீலிக்க முடியாது என்றும் 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் சட்டம் பிரிவு 69 ஏ இன் கீழாக சமூக நோக்கத்திலான பேரணிகளைதடைசெய்யமுடியாதுஎன்றும்அதற்கு ஜனாதிபதி தேர்தல்கள் சட்டத்தில் விதிவிலக்கு வழங்கப்படுள்ளது என்பதை சுட்டிக்காட்டியதோடு பேரணியை தடை செய்யக்கோரிய பொலிஸாரின் விண்ணப்பத்தை நிராகரித்திருந்தது.

மிக நீண்ட நேரமாக இடம்பெற்ற இந்த வழக்கு விசாரணையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பாக முன்னிலையானசட்டத்தரணிகள்மிகவும்சிறப்பான முறையில் தமது வாதங்களை முன்வைத்து காணாமல்ஆக்கப்பட்டவர்களின்உறவினர்களால் முன்னெடுக்கப்படும் நீதிகோரிய பேரணிக்கு சட்ட ரீதியிலான உரிமையை நீதிமன்றின் ஊடாக உறுதிப்படுத்தியிருந்தனர்.

(05)

# தங்கல்லவில் பஸ் விபத்து

## 7 பேர் காயம்



அம்பாந்தோட்டையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று தங்கல்ல பகுதியில் பாலத்தின் தடுப்பு சுவரில் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஏழு பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தால்காயமடைந்தவர்கள் தங்கல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, விபத்துக்குள் ளானவர்களின் கை, கால்களில் காயங்கள் ஏற்பட்டுள் ளன என வைத்தி யசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# உண்மை, நீதி கனவுதானா?

காணாமலாக்கப்பட்டவர்களுக்கான நீதியைக் கேட்டு அவர்களின் உறவினர்களால் வடக்கு கிழக்கு முழுவதும் நேற்றுப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. பெரும் எண்ணிக்கையான உறவினர்கள் இந்தப் போராட்டங்களில் கலந்துகொண்டு உண்மையையும் நீதியையும் வலியுறுத்தினர். போர் முடிவுக்கு வந்து 15 ஆண்டுகளாகிவிட்டபோதும்காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்னநடந்ததுஎன்கிறஉண்மையும்பாதிக்கப்பட்டோருக்கான நீதியும் இலங்கை ஆட்சியாளர்களால் மறுக்கப்பட்டே வருகின்றது. உறவினர்களின் தொடர்ச்சியான போராட்டம் உதாசீனப்படுத்தப்பட்டே வருகின்றது.

இந்தப் 15 ஆண்டுகளில் மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்களில் எவரும் பாதிக்கப்பட்டோருக்கு நீதியை வழங்கத்துணியவில்லை. காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் மற்றும் விசாரணை ஆணைக்குழுக்கள் என்று கண்துடைப்புநாடகங்கள் ஆடப்பட்டுகாலம் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றே தவிர கொழும்பிடமிருந்து இதயசுத்தியான நடவடிக்கை எதுவும் இதுவரை வந்ததில்லை.

இது போதாதென்று, தமக்கான உரிமையைக்கோரும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் மீது இலங்கை ஆட்சிகள் தொடர்ந்து ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்துவருகின்றன என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது. கண்காணிப்பு, ஒடுக்குமுறைகள், பொய்யான குற்றச்சாட்டுக்கள், வன்முறைகள் மற்றும் தன்னிச்சையான கைதுகள் என்பவற்றின்ஊடாகபாதுகாப்புத்தரப்பினர்அக்குடும்பங்களைத் தொடர்ச்சியாகத் துன்புறுத்திவருகின்றனர் என்கிறது கண்காணிப்பகம். நீதி மறுக்கப்படுவது மட்டுமல்ல நீதியைக் கேட்பவர்களும் தொடர்ந்து துன்புறுத்தப்படுகின்றனர். இந்த நிலையை மாற்ற முன்வராதவர்கள்தான் மீண்டும் மீண்டும் வாக்குகள் கேட்டு தமிழ் மக்களிடம் வருகிறார்கள் என்பது விசனத்திற்குரியது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துவதையோ அல்லது அதற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்களைத் தண்டிப்பதையோ இலங்கை ஆட்சிகள் கடந்த சில தசாப்தங்களாகவே மறுத்துவந்திருக்கின்றன. இப்போதுகூட, காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்கிற உண்மையைத் தாம் கண்டுபிடித்தாலும் அதற்குக் காரணமானவர்களைத் தண்டிக்கப்போவதில்லை என்று அரசுத் தலைவர் வேட்பாளரான அனுரகுமார திஸநாயக்க கூறுகின்றார். பதவியில் இருக்கும் அரசுத் தலைவரோ அதுபற்றி எதுவும் வாய் திறக்கவேயில்லை.

இந்த நிலையில்தான் இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் உண்மையை வெளிப்படுத்துவதும், அவற்றால் பாதிக்கப்பட்டோருக்கான நீதியை உறுதிசெய்வதும் மிக அவசியம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் –அன்ட்ரூ பிரெஞ் வலியுறுத்தியுள்ளார்.

வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப் 000000பட்டோருக்கான சர்வதேச தினத்தை நினைவுகூரும் இவ்வேளையில், இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் உண்மையை வெளிப்படுத்துவதும், அவற்றால் பாதிக்கப்பட்டோருக்கான நீதியை உறுதிசெய்வதும் மிக அவசியம் என்பதை நினைவுறுத்துகின்றோம் என்கிறார் அவர்.

”வலிந்துகாணாமலாக்கப்படல்களால்தோற்றுவிக்கப்படும் பாதுகாப்பற்றஉணர்வுகாணாமலாக்கப்பட்டவரின்நெருங்கிய உறவினர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. மாறாக அது அவர்களது ஒட்டுமொத்த சமூகத்தையும் கூட்டாகப் பாதிக்கும். தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு பாதிக்கப்பட்ட தரப்பினரின் துன்பத்தையும், ஆற்றாமையையும் மேலும் அதிகப்படுத்துகின்றது’’ என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான உண்மை, நீதி மற்றும் இழப்பீடு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை மேலும் பல நகர்வுகளை மேற்கொள்ளவேண்டியிருக்கிறது என்று ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி கூறினாலும் அதற்கான சாத்தியக்கூறுகளை இலங்கை அரசியல் களத்தில் காணமுடியவில்லை. பாதிக்கப்பட்டோருக்கான நீதி என்பது வெறும் கனவாகத்தான் தொடர்கின்றது.

# உதவும் கரங்களாகும் உண்மையான நண்பர்கள்



**என். பத்ரி**

நம் ஆடை அவிழும்போது யாரும் அழைக் காமலேயே நமது கைகள் உதவிக்கு வந்து நம் மானத்தைக் காப்பாற்றுகின்றன. அப்படித்தான் ஒரு நல்ல நட்பும். நம்மால் நல்ல நட்புகளைத் தக்க வைத்துக்கொள்ளவும், தீய நட்புகளை விலக்கி வைக்கவும் முடியும். உறவுகள் சுருங்கி வரும் இந்நாள்களில் நட்பின் பெருமையை காலம் நமக்கு கொடுத்த மிகப்பெரிய கொடையாகக் கருதி வளர்க்க வேண்டும்.

நட்புக்கு வயது இடைவெளி, பாலினம், மதம், கலாசாரம், தூரம், மொழி இவையெல்லாம் கிடையாது. நட்பு என்பது இருதரப்பினருக்கும் ஆதரவு, மகிழ்ச்சி, பாசம், துன்பகாலத்தில் உதவுதல் போன்ற சிறப்புகளைக்கொண்டது. குழந்தைப் பருவத்தில் நட்புகள் ஏறத்தாழ அதே வயதுடையவர்களுடன் மட்டுமே அமைகின்றன. இவை பெரும்பாலும் அதே பள்ளியிலும் பகுதியிலும் வாழும் குழந்தைகளுடன் ஏற்படுபவை. ஒரே மாதிரியான விருப்பங்கள், திறமைகள், வயது ஆகியவற்றின் தாக்கம் இந்நட்பில் அதிகம் காணப்படும். காரணமின்றி ஒட்டிக்கொள்வதும், வெட்டிக்கொள்வதும் குழந்தைக் கால நட்பில் அடிக்கடி நிகழும்.

குழந்தைகளின் நட்புகளில் நிரந்தரத்தன்மை காணப்படுவதில்லை. ஆனால், பழக்கத்தில் இருக்கும் நண்பர்களோடு மிகவும் பாசத்துடன் நடந்துகொள்வார்கள். தம் உணவுகளைப் பகிர்ந்து கொள்வதும், நேரம் கிடைக்கும்போதெல்லாம் நண்பனுடன் விளையாடுவதும் இவர்களின் விருப்பமான செயல்பாடுகள் ஆகும். வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத நட்பாகவும் இவை பின்னாள்களில் அமைய வாய்ப்புகள் உண்டு. குழந்தைகள் முதன் முதலாக குடும்பங்களுக்கு வெளியே உள்ள மற்றவர்களுடன் தொடர்புகொள்ள இந்த நட்புகள் உதவுகின்றன.

வாலிப வயது நட்புகள் சிக்கலானவை. பள்ளியில் மேல்வகுப்பிலும், பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப் பிலும் பொதுவாக இவர்கள் படிப்பார்கள். பெற் றோர்கள்கூட அவர்களுடன் நட்புணர்வுடன்தான் பழக வேண்டியிருக்கும். 'எல்லாம் தனக்கு தெரியும்' என்னும் எண்ணத்தில் அவர்களுடைய நடை உடை பாவனைகள் இருக்கும். அவர்களையும், அவர்களுடைய கொள்கைகளையும் மதிப்ப



வர்களையும் மட்டுமே இவர்கள் தனது நட்பு வட்டாரத்தில் சேர்த்துக் கொள்வர்.

இவர்களது நட்புகள் பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகளைப் பார்ப்பது இல்லை. எதிர்பாலின கவர்ச்சிகள் சிலரை தடுமாறச் செய்யலாம். அதனால் படிப்பிலோ, செய்யும் தொழிலிலோ கவனம் குறையலாம். கவனம் தேவை. ஆனால், எடுத்துக் கொண்ட இலட்சியத்தை நிறைவேற்ற இறுதி வரை பாடுபடுவார்கள். நட்புக்காக உயிரையும் கொடுக்கத் துணிவார்கள். சமீபத்தில் ஜல்லிக்கட்டு போராட்டத்தில் இவர்களின் ஆளுமைசக்தியை நம்மால் புரிந்து கொள்ள முடிந்தது.

பணியிட நட்புகள் பெரும்பாலும் நிரந்தரமானவை அல்ல. பணிசெய்யும் இடத்துக்கு ஏற்பதனது நட்புகளை மாற்றிக் கொள்வது அவர்களுக்கு அவசியமாக இருக்கும். பணியிடத்தில் அனைவருடனும் விருப்பு வெறுப்பு எதுவுமின்றி நடுநிலையுடன் நட்பு பாராட்டுதல் நல்லது. அலுவலக நட்பில் விரிசல் ஏற்பட்டால், நட்புக் காலத்தில் பகிரப்பட்ட தனிப்பட்ட தகவல்கள் வெளிச்சத்துக்கு வர வாய்ப்புகள் உள்ளன. எனவே, இவர்கள் தங்கள் நட்புகளுடன் கவனமாக இருக்க வேண்டும். உணவு இடைவேளை, பணி நேரம் முடிந்தபின் சற்று நேரம் செலவிடுவது, குழு விளையாட்டுகளில் ஈடுபடுவது ஆகியவற்றின் மூலம் பொதுவாக இவ்வகைத் தொடர்புகள் உறுதிப்படுகின்றன.

முதுமை காலத்தில் நண்பர்கள் மிகவும் குறைவாகவே இருப்பார்கள். அவர்களின் உதவி பிறருக்கு மிகவும் குறைவாகவே தேவைப்படும். அதனால் இவர்களை நேரில் சந்தித்துப் பேசும் நட்புகளும் மிகவும் குறைவாகவே இருக்கும். அப்படி சந்திப்பவர்களும் ஓய்வூதிய சந்தா வாங்க வருபவர்களாக இருப்பார்கள். இவர்களுக்கு வரக்கூடிய தொலைபேசி அழைப்புகள்கூட மிகக் குறைவாகவே இருக்கும். ஆனால், காலம் செல்ல செல்ல முதியோர்களுக்கு தனிமை வந்து ஒட்டிக் கொள்ளும். நட்பு வட்டாரமும் மிகவும் சுருங்கிவிடும்.

முகநூல் நண்பர்களில் உண்மையானவர்களை அடையாளம் கண்டு பழகுவது நல்லது. எந்தச் சூழ்நிலையிலும் தன் அந்தரங்க தகவல்களையும், படங்களையும் சமூகவெளிகளில், குறிப்பாக பெண்கள் தவிர்ப்பது நல்லது. இவற்றின் மூலம் புதிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடியும்.

வாழ்க்கையில் நாம் கொண்டுள்ள உள்ளார்ந்த நட்புகளுக்கு இதயபூர்வமான பாராட்டுகளை அவ்வப்போது புன்முறுவல்களுடன் தெரிவிக்க வேண்டும். நண்பர்களுடன் உள்ள பிணைப்பை அவ்வப்போது புதுப்பித்துக் கொள்ள தேவையான முனைப்புகளை முன்னெடுப்பதில் சுணக்கம் காட்டக் கூடாது. உண்மையான நட்புகளை கல்விக் கூடங்களிலும், பணியிடங்களிலும், பொதுவெளிகளிலும் இனம் கண்டு வாழ்வில் சேர்த்துக் கொள்வதில் ஆர்வத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும். வறுமையிலும், செழுமையிலும் நட்புகளுடன் இணைந்தே இருக்க வேண்டும்.

குழந்தைப் பருவத்தில் ஓடி விளையாட ஒரு நட்பு. காளைப் பருவத்தில் ஊர் சுற்ற ஒரு நட்பு. வாலிப பருவத்தில் பேசி ரசிக்க ஒரு நட்பு. முதிர்ந்த பின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு நட்பு. இப்படி நட்புகள் ஆயிரம் இருந்தும் அதன் தேவைகள் குறைவதில்லை. துயரின்போது உதவும்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரை சந்தித்த மலையக தமிழ்ப் பிரதிநிதிகள்



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான், அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன்,கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார்,தொழில் இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தலைவருமான வடிவேல் சுரேஷ் ஆகியோர் மரியாதை நிமித்தமாக கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போது இலங்கை மற்றும் இந்தியாவிற்குமிடையிலான உறவைவலுப்படுத்துதல்மற்றும்சமூகபொருளாதாரவிடயங்கள்மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலுக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானால் நினைவு சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது. (05)



# உதவும் கரங்களாகும் உண்மையான நண்பர்கள்

4ம் பக்க தொடர்ச்சி...........

கரங்களாகும் நட்பு ஒரு பொழுதும் பிறரின் முன் நம்மை தலைகுனிய வைப்பதில்லை.

ஒரு நல்ல நண்பன் நூறு உறவினர்களுக்கு ஈடானவன். நல்ல நண்பர்களாய் தொடர்ந்து வாழ்வதில்தான் நட்பின் வெற்றி அடங்கி இருக்கிறது. நட்புகளில் காணும் குறைகளைப் பெரிதுபடுத்தாமல் பிணைப்புகளை தொடர்ந்து வளர்த்துக்கொள்வோம். நட்பில் கருணை, அன்பு, சரியான புரிதல் ஆகியவற்றை வளர்த்துக் கொண்டு, சிறந்த நண்பர்களாக தொடர்ந்து பரிமளிக்க அடுத்த தலைமுறையினருக்கு முன்மாதிரியாக வாழ்வோம்.

# கடவுச்சீட்டுக்கும்கூட நீண்ட வரிசையை ஏற்படுத்திய ஆட்சிக்கு வாக்களிப்பதா?

## பொதுமக்கள் விசனம்



கடவுச்சீட்டினை பெற்றுக்கொள்வதற்காக நீண்டவரிசையில்வவுனியா குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் முன்பாக ஆறு நாள்களுக்கு மேல் அடிப்படை வசதியின்றி வீதி ஓரத்தில் இரவு பகலாக காத்திருக்கவேண்டிய நிலையை ஏற்படுத்திய இந்த அரசாங்கத்துக்கு வாக்களிக்க வேண்டுமா என கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள காத்திருக்கும் மக்கள் தெரிவித்தனர்.


இந்ததிணைக்களத்தின்ஊடாகஒருநாளைக்கு 25 நபர்களுக்கும், ஒருநாள் சேவையின் கீழ் 25 நபர்களுக்கும், ஏற்கனவே சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்து குறிப்பிட்ட காலம் முடிவடைந்ததும் கடவுச்சீட்டினை பெறாதவர்கள் 10 நபர்கள் என ஒரு நாளைக்கு 60 நபர்களுக்கு வவுனியா பிராந்திய குடிவரவு குடியகல்வு திணைக்களத்தால் கடவுச்சீட்டுக்கள் வழுங்கப்படுகின்றன.

மேலும், ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டினை பெறுபவர்களில் முக்கிய தேவையுடையவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையிலும் கடவுச்சீட்டு விநியோகிக் கப்படுகின்றன.

இந்நிலையில், வவுனியா பிராந்திய குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு முன்பாக கடந்த ஆறு நாள்களாக வரிசையில் 600 இற்கும் மேற்பட்ட மக்கள் கடவுச்சீட்டைப் பெறுவதற்காக காத்திருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# 13 வயது மாணவி துஸ்பிரயோகம் வரலாற்றுப் பாட ஆசிரியர் கைது

13 வயது பாடசாலை மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் அதே பாடசாலை யில் கடமையாற்றும் வரலாறு பாட ஆசிரியர் ஒருவர் கடந்த 28 ஆம் திகதி கைது செய்யப்பட்டுளார் என வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

சந்தேக நபரான வரலாறு பாட ஆசிரியர் கடந்த மார்ச் மாதம் 09 ஆம் திகதி மாணவியை ஏமாற்றி மல்வத்தாவெல பிரதேசத்திற்குத் தனது காரில் அழைத்துச் சென்றுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரான வரலாறு பாட ஆசிரியர் இந்த மாண வியை காரினுள் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பின்னர், இது தொடர்பில் எவரிடமும் கூறக் கூடாது என சந்தேக நபரான வரலாறு பாட ஆசிரியர் இந்த மாணவியை அச்சுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், இந்த மாணவி நீண்ட நாள்களாகப் பாடசாலைக்கு வருகை தராமல் இருப்பதால் அதே பாடசாலையில் கடமையாற்றும் மற்றுமொரு ஆசிரியை ஒருவர் இது தொடர்பில் ஆராய்ந்து பார்த்த போது குறித்த சம்பவம் தொடர்பில் அறிந்து கொண்டுள்ளார்.

இதனையடுத்து, இந்த ஆசிரியை இது தொடர்பில் வெல்லவாய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேக நபரான வரலாறு பாட ஆசிரியரைக் கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவி வைத்திய பரிசோதனைக்காக வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை வெல்லவாய நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# ரயிலுடன் வான் மோதி விபத்து

## சாரதி படுகாயம்

அம்பேபுஸ்ஸ ரயில் நிலையத்திற்கும் யத்தல்கொட ரயில் நிலையத்திற்கும் இடையில் உள்ள ரயில் மார்க்கத்தில் வான் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கண்டியிலிருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த ரயில் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளான வானின் முன் பகுதி முற்றிலும் சேதமடைந்துள்ள நிலையில் சாரதி படுகாயமடைந்து வரக்காபொல ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என மீரிகம பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# கதிர்காமத்தில் பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம்

## அதிபருக்கு விளக்கமறியல்

கடந்த 22 ஆம் திகதி கதிர்காமம் பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்விகற்கும் மாணவி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பாடசாலை அதிபரை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திஸ்ஸமஹாராம நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள பாடசாலை அதிபர் பல மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மாணவிகள் தொடர்பிலும் குறித்த சம்பவத்துக்கு உதவி செய்தவர்கள் தொடர்பிலும் விசாரணைகளை நடத்துமாறு பாதிக்கப்பட்ட மாணவிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, கோத்தமீகம கிராமத்தில் உள்ள பெற்றோர்கள் அனைவரும் இணைந்து வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

# குடும்ப பெண் கடத்தல் வானுடன் 4 பேர் கைது

## வவுனியாவில் சம்பவம்

வவுனியாவில் இருந்து குடும்ப பெண் ஒருவர் கடத்தப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதுடன், வானுடன் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கொக்குவெளி, அரசடி வீதியில் வசித்து வந்த குடும்ப பெண் ஒருவரை யாழ்ப்பாணத்தில் இருந்து வான் ஒன்றில் வந்த குழுவினர் கடத்திச் சென்றுள்ளனர்.

வீட்டில் இருந்த பெண்ணை தூக்கிச் சென்றவர்களை பெண்ணின் மாமியார் தடுக்க முயன்றுள்ளார். அவ்வேளை மாமியாரை உதைத்துத் தள்ளிவிட்டு சந்தேக நபர்கள் பெண்ணை கடத்திச் சென்றுள்ளனர்.

இதன்பின் மாமியார் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஹேமந்த தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் அஹமட், பொலிஸ் சார்ஜன்ட் திலீபன், பொலிஸ் கொன்தாபிள்களான தயாளன், ரணில், கால்கே உள்ளடங்கிய பொலிஸ் குழுவினர் விரைந்து செயற்பட்டு குறித்த வாகனம் சென்ற பாதையை பின் தொடர்ந்து சென்ற போது குறித்த வாகனத்தை பளைப் பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்துள்ளதுடன், குறித்த பெண்ணையும் மீட்டுள்ளனர்.

இதன்போது, கடத்தலுக்கு பயன்படுத்த வாகனம் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், நான்கு இளைஞர்களும் கைது செய்யப் பட்டுள்ளனர். மணியந்தோட்டம், இருபாலை, சுன்னாகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நான்கு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த நான்கு பேரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(05)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் திருமலையில் போராட்டம்



திருகோணமலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் நேற்று (வெள்ளிக்கிழமை) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த உறவுகள் கலந்துகொண்டனர்.

பன்னாட்டு சமூகத்தின் நீதிக்கான தலையிடலை வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தினத்தை முன்னிட்டு இந்த போராட்டம் திருகோணமலை கடற்கரைக்கு முன்னால் இடம்பெற்றது.

’ஓம்பீ ஓர் ஏமாற்று நாடகம்’, ’காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி இல்லை’, ’சர்வதேச நீதி மற்றும் பொறுப்புக்கூறலை நாங்கள் கோருகிறோம்’ உள்ளிட்ட வாசகங்களை ஏந்தியும், ஈகைச் சுடரினை ஏற்றியும் கண்ணீருடன் நீதி கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் முறுகல் நிலையும் ஏற்பட்டது. (05)



# உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ள துப்பாக்கியுடன் வயோதிபர் கைது

மங்களகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹியங்கனயாய பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக் கியுடன் வயோதிபர் ஒருவர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக மங்களகம பொலிஸார் தெரிவித்தனர்.

மங்களகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மங்களகம பிரதேசத்தை சேர்ந்த 75 வயதுடைய வயோதிபராவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மங்களகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## உறவுகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்களால் முன்னெடுக்கப்படவிருக்கும் பேரணிக்குத் தடைவிதிக்குமாறு ஒகஸ்ட் 29 ஆம் திகதி திருகோணமலை நீதிமன்றத்திடம் பொலிஸார் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமல் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் நாளாந்தம் பெரும் துன்பத்தை அனுபவித்துவருகின்றனர். பெரும் எண்ணிக்கையான தாய்மார், மனைவிமார் உள்ளிட்ட உறவினர்கள் அவர்களது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறியாமலே உயிரிழந்திருப்பதுடன், மேலும் பலர் தமக்குரிய நீதி நிலைநாட்டப்படுவதைப் பார்க்காமலேயே தாம் உயிரிழந்துவிடுவோம் என அஞ்சுகின்றனர்.

1987 - 1989 வரையான காலப்பகுதியில் ஜனதா விமுக்தி பெரமுன (மக்கள் விடுதலை முன்னணி) எழுச்சியின்போது காணாமலாக்கப்பட்டவர்கள் மற்றும் 1983 - 2009 வரையான காலப்பகுதியில் அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான போரின்போது காணாமலாக்கப்பட்டவர்கள் உள்ளடங்கலாக உலகிலேயே அதிக எண்ணிக்கையான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் இடம்பெற்ற நாடுகளில் ஒன்றாக இலங்கை இருக்கின்றது.

இருப்பினும் வலிந்து காணாமலாக்கப் பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துவ தையோ அல்லது அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களைத் தண்டிப்பதையோ இலங்கை ஆட்சிகள் கடந்த சில தசாப்தங்களாக மறுத்துவந்திருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் வோல்கர் டர்க்கினால் கடந்த வாரம் வெளியிடப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கையில் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பில் இயங்கிவருபவர்கள் மீதான கண்காணிப்பு மற்றும் ஒடுக்குமுறைகள் தொடர்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அதேபோன்று ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்துடன் நெருங்கிப் பணியாற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் தொடர்வதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மனித உரிமைகள் கண்காணிப்பக அதிகாரிகள் கடந்த மே மாதம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சென்று வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களை, குறிப்பாக தாய்மார் மற்றும் மனைவிமாரைச் சந்தித்ததனர். அதன்போது அவர்கள் தாம் முகங்கொடுத்துவரும் மீறல்கள் பற்றி விளக்கமளித்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையரின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச சட்டங் களுக்கு முரணான குற்றங்களுடன் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டி ருப்போர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு, அவர்களைத் தண்டித்தல், குற்றஞ்சாட்டப்பட்டிருப்போருக்கு எதிராகத் தடைகளை விதித்தல், இலங்கையில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் ஆதாரங்களைத்திரட்டுவதற்கான ஆணையை ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையருக்கு அலுவலகத்துக்கு வழங்கும் ஆணையை மீளப்புதுப்பித்தல் ஆகிய பரிந்துரைகளை ஐ.நா மனித உரிமைகள் பேரவையும், உறுப்பு நாடுகளும், ஐ.நா முகவரமைப்புக்களும் நடைமுறைப்படுத்தவேண்டும்.

அதேவேளை இலங்கை ஆளும்தரப்பு இத்தகைய மீறல்களில் ஈடுபடும்போது மனித உரிமைகள் பேரவையும், ஏனைய நாடுகளின் அரசுகளும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் பக்கம் நிற்கவேண்டும் என்று அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்களிக்கலாம். அங்கு விருப்பங்களைக் குறிக்க முடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வாக்காளர் விரும்பினால் மூன்று வேட்பாளர்களுக்குத் தமது விருப்பத் தெரிவை வழங்க முடியும். 01, 02 மற்றும் 03 என எழுதுவதன் மூலம் தமது விருப்பத்தைத் தெரிவிக்க -முடியும்.

விருப்பம் குறிக்கப்பட்டால், கதிரா குறியை குறிக்க முடியாது. அவ்வாறு குறியிட்டால் அந்த வாக்கு செல்லாததாகிவிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சிலிண்டருக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் 'சிலிண்டர்' சின்னத்துக்கு வாக்களிக்கவில்லை என்றால் தண்ணீரும் கிடைக்காது என்று தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

மொனராகலையில் வியாழக்கிழமை (29) பிற்பகல் இடம்பெற்ற 'இயலும் ஶ்ரீலங்கா' பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

இன்று ஒரே கூட்டத்துக்காக கூடியிருக்கும் மக்கள் கடந்த காலங்களில் ஒவ்வொரு குழுக்களுக்கு ஆதரவளித்தனர். இன்று அனைவரும் ஒரு மேடையில் இருக்கின்றனர். இவர்கள் எவரும் கட்சி மாறவில்லை. ஆனால் 2022 ஆம் ஆண்டில் அனைவரும் வாழ்க்கைச் சவால்களை எதிர்கொண்டோம். எந்தவொரு கட்சியினருக்கும் அந்த கஷ்டங்கள் வெவ்வேறாக இருக்கவில்லை. அனைத்து கட்சியினரும் வரிசையில் அவதிபட்டனர். அதனாலேயே இன்று அனைவரும் இந்த மேடையில் உள்ளனர்.

சிலர் வருமானத்தை இழந்து தவித்தனர். நாம் நாட்டைக் காப்பாற்ற ஒற்றுமையாக பயணிக்க வேண்டியது அவசியமாகும். அதற்காகவே ஆளும் தரப்பும் ஒற்றுமையாக பயணித்தது. நாட்டை மீட்பதற்காக நாங்கள் ஒன்றுபட்டோம்.

நெருக்கடி காலத்தில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 15 சதவீதமாகக் குறைந்து போனது. உற்பத்தியை அதிகரிக்க வேண்டியிருந்தது. கிரீஸ் இவ்வாறுதான் சரிவை கண்டது. இலங்கைக்கும் அந்த நிலை ஏற்பட இடமளிக்காமல் நான் அமெரிக்கா, உலக வங்கியுடன் பேசி உரத்தை பெற்றுக்கொண்டு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் சிறுபோகத்துக்கு உரம் பெற்றுக்கொடுத்தோம். 2023 இல் பெரும்போகத்துக்கு உரம் கொடுத்தோம். 4 போகங்கள் சாத்தியமாக நடந்தன.

அதேபோல் பழங்கள், மறக்கறி விளைச்சலும் கிடைத்தது. அதன் பலனாக மொத்த தேசிய உற்பத்தி அதிகரித்தது. தொழிற்சாலைகள் முடங்கிகிடந்த வேளையில் விவசாயத்தை மேம்படுத்த முடிந்தது. நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைத்தன்மையை பாதுகாக்கவே ஜனாதிபதி தேர்தலை நடத்துகிறோம். உரிய தீர்மானத்தை மக்கள் எடுக்கவேண்டும்.

ஜே.வி.பி.யிடமோ ஐக்கிய மக்கள் சக்தியிடமோ நாட்டின் முன்றேற்றத்திற்கான திட்டம் இல்லை. அதனால் வாழ்க்கைச் செலவை குறைக்க வரியை குறைப்போம் என்கின்றனர். அப்படிச் செய்தால் அரச வருமானம் குறையும். அவ்வாறு செய்துவிட்டு பழைய நிலைக்கே திரும்பிச் செல்ல வேண்டியிருக்கும்.

கோட்டாபய ஜனாதிபதியும் அதனையே செய்தார். சஜித்தும் அனுரவும் அதனையே செய்யப்போதாக சொல்கிறார்கள். அப்படியாயின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியடித்தது அர்த்தமற்றதாகிவிடும்.

முன்னாள் ஜனாதிபதி முறையான திட்டமின்றி முன்னெடுத்த வரிகளை குறைப்பு தீர்மானத்தால் 2022 இல் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

முன்னாள் ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு சஜித்தும் அனுரவும் எதற்காக அவருக்கு எதிரான போராட்டங்களை நடத்தி அவரை வீட்டுக்கு அனுப்பினார்கள்?

கடந்த இரண்டு வருட காலத்தில் சிரமப்பட்டு முன்னெடுத்துச் சென்ற பொருளாதாரத்தை பாதுகாத்து, மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய ஒரு நாட்டை உருவாக்கவே இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டில் பொருளாதாரம் வலுவடைந்ததால் மக்களுக்கு ஓரளவு சலுகை வழங்கினோம். அதனால் அரச ஊழியர்களுக்கு 10 சம்பள அதிகரிப்பை இரண்டு கட்டங்களின் கீழ் வழங்கினோம். உதய செனவிரத்ன அறிக்கையின் பிரகாரம் அடுத்த ஆண்டிலும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

நிதி இருப்பதால் அதனைச் செய்கிறோம். வறுமையான மக்களுக்கும் நாம் சலுகை வழங்குகிறோம். பொய் வாக்குறுதிகளை நான் ஒருபோதும் சொல்லமாட்டேன். நாட்டில் வளர்ச்சி ஏற்படும்போது சம்பளம் அதிகரிக்கும். பொருட்களின் விலையும் குறையும். 2025 - 2026 எவ்வாறு சலுகை கிடைக்கும் என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள். 2026 இறுதி காலாண்டில் சலுகைகள் அதிகளவில் கிடைக்கும்.

அரச ஊழியர்கள் பல நெருக்கடிக்கு முகம்கொடுத்தனர். இன்று ஓரளவு மொத்த தேசிய உற்பத்தி அதிகரிக்கிறது. 2022 - 2023 கஸ்டங்களை முடிவுக்கு கொண்டு வந்துள்ளோம். இனி இளையோருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவோம். சுய தொழில் பயிற்சியைப் பெறவும் நிதிச் சலுகை வழங்குவோம். பொருளாதார மேம்பாட்டை உருவாக்கவும் வழிசெய்வோம். இந்த ஆட்சியில் தீர்க்க முடியாமல் போன பிரச்சினைகளுக்கு அடுத்த முறை விரைவில் தீர்வு தருவோம்.

குளங்களை மறுசீரமைத்து காணிகளைப் பகிர்ந்தளித்து நாம் விவசாயத்தை பலப்படுத்துவோம். உமா ஓயா வேலைத் திட்டத்தை நிறைவுசெய்யவேண்டியுள்ளது. 5 வருடங்கள் இப்பகுதி மக்களுக்கு வசதிகளைத் தந்து அவகாசம் தருகிறேன். நீங்கள் விளைச்சலை அதிகரிக்க வேண்டும்.

நாட்டை முன்நோக்கி நகர்த்த செப்டெம்பர் 21 சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது தண்ணீரும் இருக்காது - என்றார்.

## திருகோணமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

திருகோணமலையில் 99 எண்ணெய் தாங்கிகள் உள்ளன. ஒரு தொட்டியில் 10,000 மெட்ரிக் தொண் மசகு எண்ணெய் அவற்றில் சேமிக்க முடியும். தோராயமாக பத்து லட்சம் மெட்ரிக் தொண் சேமிக்க முடியும்.

அந்த எண்ணெய் நமது தேவைக்கு அதிகமானது. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தைத் தொடங்கி, எண்ணெயைச் சுத்திகரித்து, சேமித்து, அருகிலுள்ள துறைமுகத்திலிருந்து சந்தைக்கு அனுப்பலாம்.

அந்தப் பணியைச் செய்யக்கூடிய சர்வதேச நிறுவனமும், எண்ணெய்க் கூட்டுத்தாபனமும் ஒன்றிணைந்து திருகோணமலையில் உள்ள எண்ணெய் தாங்கி வளாகத்துக்குப் புத்துயிர் அளிக்கும். அதை மீட்டெடுப்போம் - என்றார் அவர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir



## வவுனியாவில் கூரிய ஆயுதத்தினால் தாக்கி இளம் குடும்பஸ்தர் கொலை

வவுனியாவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் வியாழக்கிழமை மரணமடைந்துள்ளார் என பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கற்பகபுரம் பகுதியில் கடந்த செவ்வாய்கிழமை தனது நண்பர்களுடன் மது விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட நபரொருவர் அங்கு வந்த குழுவொன்றால் கூரிய ஆயுதத்தால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து,காயமடைந்த நபர் வவுனியா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு,மேலதிகசிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் வவுனியா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்;க்கப்பட்டிருந்தார்.

இதன்போது, சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணம், சில்லாலை பகுதியைச்சேர்ந்த 36 வயதுடைய ஒருபிள்ளையின் தந்தையாவார்.

வவுனியா வைத்தியசாலையில் சடலத்தை பார்வையிட்ட மாவட்ட நீதிபதி இது தொடர்பான வாக்குமூலங்களையும் பெற்றிருந்தார். சம்பவம் தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர்.(05)

## சக மாணவனின் தந்தை தாக்கி நான்கு மாணவர்கள் படுகாயம்

புத்தளம், கற்பிட்டி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் நான்கு மாணவர்கள் சக மாணவன் ஒருவரின் தந்தையால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளனர் எனக் கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

08 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் 13 வயதுடைய மாணவனொருவரும் 09 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் 14 வயதுடைய மூன்று மாணவர்களுமே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது –

09 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் மூவரும் தங்களது வகுப்பில் கல்வி கற்கும் சக மாணவன் ஒருவரைப் பலமாகத் தாக்கியுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான சக மாணவன் பாடசாலை நுழைவாயிலுக்கு அருகில் வைத்து இந்த சம்பவம் தொடர்பில் தனது தந்தையிடம் கூறியுள்ளார்.

இதனால் கோபமடைந்த தந்தை தாக்குதலை மேற்கொண்டதாகக் கூறப்படும் மாணவர்களை அழைத்து அவர்களைப் பலமாகத் தாக்கியுள்ளார்.

இதன்போது, இந்த மாணவர்களுடன் இருந்த 8 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் 13 வயதுடைய மாணவன் ஒருவனும் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் சகமாணவனின் தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

05)

## மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்கு அருகில் விபத்து ; ஒருவர் படுகாயம்





மொரட்டுவை பல்கலைக் கழகத்திற்கு அருகில் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கெப்வாகனம் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த கார் மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, மோட்டார் சைக்கிள் செலுத்துநர் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(05)



# பொலிஸாரின் தடையுத்தரவை மீறி திருகோணமலையில் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் அனுஸ்டிப்பு



சர்வதேசகாணாமல்போனோர்தினத்தைமுன்னிட்டுகிழக்கு மாகாணவலிந்துகாணாமல்ஆக்கப்பட்டசங்கத்தின்ஏற்பாட்டில் நேற்று(வெள்ளிக்கிழமை) திருகோணமலை கடற்கரையில் உள்ள வெலிக்கடை தியாகிகள் நினைவு திறந்த வெளி அரங்கிற்கு அண்மையில் பொலிஸாரின் தடையுத்தரவையும் மீறி காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் அனுஸ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச்சேர்ந்தகாணாமல் ஆக்கப்பட்டவர்களின்உறவினர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், மதகுருமார்கள் உட்பட பெருமளவிலானவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

இதன்போது'எமதுஉறவுகளுக்கு நீதி வேண்டும';, 'காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே', 'சர்வதேச விசாரணையே வேண்டும';, 'காணாமல்போனோர் அலுவலகம் வேண்டாம்', 'மரணச்சாண்றிதழ் வேண்டாம்' போன்ற கோசங்களை எழுப்பியும், தமது உறவுகளின் புகைப்படங்கள், பதாதைகள் மற்றும் தீச்சட்டிகளை ஏந்தியும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரட்ரிக் கோட்டை வீதி வழியாக வெலிக்கடைதியாகிகள்நினைவுதிறந்தவெளிஅரங்கிற்குசெல்ல முற்பட்டபோதுபொலிஸாரால்தடுத்துநிறுத்தப்பட்டனர்இதனால்






அவ்விடத்தில்சிலமணிநேரம்ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் அங்கிருந்து திரும்பி வந்து கடற்கரை ஓரமாக வெலிக்கடை தியாகிகள் அரங்கிற்கு சென்று தீபச்சுடர் ஏற்றி காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கான நீதிகோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ரஜீவ்காந்த் என்பவரை விடுதலை செய்யக்கோரியும் விடுதலை செய்யும்வரை அவ்விடத்தில் இருந்து நகரமாட்டோம் என அவ்விடத்தில் அமர்ந்தவாறு கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.



பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர் விடுதலை செய்யப்பட்ட பின்னர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கங்களின் தலைவிமார்களால் மகஜர் ஒன்றும் வாசிக்கப்பட்டு திருகோணமலை மாவட்ட மறைமாவட்ட ஆயரின் ஊடாக ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி வைக்குமாறு அவ்விடத்திற்கு வருகை தந்திருந்த அருட்தந்தையர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

குறித்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமானது சிவன் கோவிலடியில் இருந்து ஆரம்பித்து வெலிக்கடை தியாகிகள் அரங்கிற்கு செல்லவிருந்த நிலையில் குறித்த நிகழ்வுக்கு தடை விதிக்கக்கோரி வியாழக்கிழமை திருகோணமலை தலைமைப் பொலிஸாரினால் கிண்ணியா சுற்றுலா நீதிமன்றில் தடையுத்தரவு பெறப்பட்டிருந்தது.

திருகோணமலை பிரதேசத்தில் ஓர் ஆர்ப்பாட்ட நிகழ்வு இடம்பெறப்போவதாகவும்அதுசமாதானத்திற்குபங்கம்விளைவிப்பதாகவும், பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் மிக்கதாகவும், இனங்களுக்கிடையே முறுகல் நிலைமை ஏற்படப்போவதாகவும் இதன்மூலம் சமாதாக குலைவு ஏற்பட வாய்ப்புள்ளதால் 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடபடிமுறைக் கோவையின் 106(1)இன் கீழும், 106(3)இன் கீழும் குறிப்பிட்ட ஆர்ப்பாட்டத்தை தடைசெய்யுமாறு ஓர் தடை உத்தரவை பிறப்பிக்குமாறு நீதிமன்றில் விண்ணப்பம் செய்ததன் அடிப்படையில் கிண்ணியா சுற்றுலா நீதிமன்ற நீதிபதியால் குறித்த தடையுத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

இதன்போது நீதிமன்றானது அரசமைப்பிலே பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற பேச்சுரிமை, கருத்துரிமை ஒன்று கூடும் சுதந்திரம் என்பன மழுங்கடிக்கப்படாமல் இருக்கின்ற வகையில் இத்தடை உத்தரவு இருக்க வேண்டும் என்பதில் நீதிமன்றம் கவனமாக இருக்கின்றது.

எனவே அரசமைப்பிலே ஒரு பிரஜைக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளை பாதுகாக்கின்ற அதே நிலையில் பொதுமக்களுக்கும், பாதுகாப்பிற்கும், இனங்களுக்கும் இடையில் அச்சுறுத்தலும் பீதியும் ஏற்படுகின்ற போது அதனை தடை செய்கின்ற விதத்தில் நீதிமன்றம் இக்கட்டளையை பிறப்பிக்கின்றது.

எனவே, பொலிஸார் குறித்த நிகழ்வு சமாதான சீர்குலைவையும் இனங்களுக்கிடையில் முறுகல் நிலையையும் மக்களுக்கு பாதுகாப்பு விடயத்தில் அச்சுறுத்தல் ஏற்படுமாக இருக்கும் என நம்பினால் அதை நம்புவதாக அதற்கான நிகழ்வுகள் காணப்படுமாக இருந்தால் குறித்த விடயத்தை இத்தால் மன்று தடை செய்கின்றது என குறித்த தடையுத்தரவில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.(05)

# காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் வவுனியாவில் மாபெரும் போராட்டம்

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று (வெள்ளிக்கிழமை) தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தினரால் ஆர்ப்பாட்டம் ஒன்று



முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டமானது வவுனியா தபால் திணைக்களத்தின் அருகில் 2,750 ஆவது நாளாக




காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் சுழற்சிமுறை போராட்டத்தில் ஈடுபடும் கொட்டகைக்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போதுஎங்கேஎங்கேஉறவுகள்எங்கேகையில் ஒப்படைக்கப்பட்டஉறவுகள்எங்கேஎன்றுகோஷங்களை எழுப்பியிருந்ததுடன், ஐரோப்பிய ஒன்றிய மற்றும் அமெரிக்க கொடிகளை தாங்கியவாறும், காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவுகளின் படங்களை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.(05)

# காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் யாழில் மாபெரும் ஆர்ப்பாட்டம்











சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில், வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும்சேர்ந்தவலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் யாழ்ப்பாணத்தில் நேற்று(வெள்ளிக்கிழமை)மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில், யாழ்ப்பாணம் – ஸ்ரான்லி வீதியில் அமைந்துள் ஆரியகுளம்ஸ்ரீஞானவைரவர்ஆலய வளாகத்திலிருந்து ஆரம்பமான குறித்த ஆர்ப்பாட்டப்பேரணி, முனியப்பர் கோவில் வரையில் இடம்பெற்றது.

குறித்த,ஆர்ப்பாட்டப்பேரணியில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை கையளிக்க வலியுறுத்தும் வகையிலான பதாதைகளைத் தாங்கியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டப்பேரணியில்ஈடுபட்டனர்.

அத்தோடு, ஐந்து மாவட்டங்களையும்பிரதிநிதித்துவப்படுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்ஐவர்தீச்சட்டிஏந்திஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டிருந்தனர். ஆர்ப்பாட்டபேரணியின் முடிவில் 'நீதி?' என எழுதப்பட்ட பாத்திரமொன்றினுள் ஆர்ப்பாட்டக் காரர்களால் தீச்சுடரேற்றப்பட்டு தமக்கான நீதியை வலியுறுத்தும் செயற்பாட்டிலும் ஈடுபட்டிருந்தனர்.

மேலும், இவ்வார்ப் பாட்டப் பேரணியில்வடமாகாணத்தின்ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளுடன்,அரசியல்பிரதிநிதிகள், சமூகமட்ட பிரதிநிதிகள், உள்ளிட்ட பெரு மளவானோர் பங்கேற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிவேண்டி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் போராட்டம்












அனைத்துலக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது தினமானது நேற்று (வெள்ளிக்கிழமை) சர்வதேச ரீதியாக அனுஷ்டிக்கப்படுகிறது.

அந்தவகையில்யாழ்ப்பாணம்பல்கலைக் கழகத்திற்குமுன்னால், காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளுக்குநீதிவேண்டிபோராட்டம்ஒன்று நேற்று மதியம் முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டம் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகளை ஏந்தி, வாய்களை கறுப்பு துணியால் கட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தலைவர் துவாரகன், பல்கலைக்கழக ஒன்றியத்தின்செயலாளர்சிந்துஜன், கலைப்பீட மாணவர் ஒன்றியம்தலைவர் நெவில்குமார், விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் விதுசன் மற்றும் மாணவர்கள் இந்த போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.08.2024இல் வெளியிடப்பெற்றது